# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/66 - 2024 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2024.08.16

*2397/66 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி சனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடாத்தப்படுகின்ற 2024 சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், தேருநரொருவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கமைய இந்த சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், தேருநரொருவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து உசாவியதன் பின்னர், சொல்லப்பட்ட தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி, வேறு அரசியல் கட்சி, வேட்பாளரொருவரை பெயர் குறித்து நியமித்த தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள தேருநரொருவரினால் அத்துடன் வேட்பாளரொருவரினால் செலவிடப்பட வேண்டிய செலவின எல்லைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டதையடுத்து இதனகத்துள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, ஒகத்து மாதம் 16 ஆந் திகதி.




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

01. சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒவ்வொருவரினாலும் செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தேருநரொருவர் சார்பாக ரூபா 109.00 (நூற்று ஒன்பது ரூபா) தொகைக்கு மேற்படாத பணத்தொகை வீதம் தமது தேர்தல் பிரச்சார செலவினமாக 2024 சனாதிபதித் தேர்தல் தொடர்பில் செலவிடப்பட முடியும். அதற்கமைய, செலவிடக்கூடிய ஆகக்கூடிய செலவின எல்லை ரூபா 1,868,298,586.00 (நூற்று எண்பத்தாறு கோடி எண்பத்திரெண்டு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்தாறு) ஆகும்.

02. இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு குறித்த தொகையில் 60% ஐ அன்றேல் 1,120,979,151.60 (நூற்றுப் பன்னிரெண்டு கோடி ஒன்பது இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தொரு ரூபா அறுபது சதம்) தொகையை தமது பிரச்சார செலவினமாக செலவிட முடியும். அதேபோல், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை அல்லது வேறு அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரொருவரை பெயர் குறித்து நியமித்த தேருநருக்கு சொல்லப்பட்ட தொகையில் 40% ஐ அன்றேல் ரூபா 747,319,434.40 (எழுபத்து நான்கு கோடி எழுபத்து மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று முப்பத்து நான்கு ரூபா நாற்பது சதம்) தொகையை ஒவ்வொரு வேட்பாளரின் பிரச்சார நடவடிக்கைக்கும் அக்கட்சியின் செயலாளருக்கு அல்லது தேருநருக்கு செலவிட முடியும்.

| தொ. இல. | விபரம் | செலவின எல்லை (ரூ.) |
|---|---|---|
| 01. | 2024 சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட தொகை | 1,120,979,151.60 |
| 02. | 2024 சனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளரொருவரை தோற்றச்செய்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது தேருநருக்கு செலவிடக்கூடிய தொகை | 747,319,434.40 |
| மொத்தம் | | 1,868,298,586.00 |

03. தேர்தல் பிரச்சார செலவினங்கள் அடங்கிய செலவின விபரத்திரட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 (இருபத்தொரு) நாட்களுக்குள் குறித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது வேறு அரசியல் கட்சியினால் அல்லது வேட்பாளரை பெயர் குறித்து நியமித்த தேருநரினால் அத்துடன் வேட்பாளரினால் வெவ்வேறாக தயாரிக்கப்பட்டு வேட்பாளரின் கையொப்பம் சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது சமாதான நீதவானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அவ்விபரத்திரட்டில்,

i. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை பெயர் குறித்து நியமித்த தேருநர் அத்துடன் வேட்பாளர் சார்பாக பெறப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் அத்துடன் அத்தகைய நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் பொருளாகவிருப்பின் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியும், குறித்த கொடை, கடன் முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையாக அன்பளிப்புச் செய்யப்பட்டதா,

ii. அத்தகைய நன்கொடைகளை, உதவுதொகைகளை அளிக்கின்ற தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரிசெலுத்துநரை அடையாளம் காணும் இலக்கமும் (TIN இலக்கம்) அல்லது பதிவு இலக்கமும்

உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

அவ்விபரத்திரட்டில்,

(அ) எந்த ஊடகத்தின் அல்லது வேறு வகையிலான நடவடிக்கைகள் சம்பந்தமான செலவுகள் (விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், கொடிகள், பதாகைகள், சித்திரங்கள், நிழற்படங்கள், அறிவித்தல்கள், சுவரொட்டிகள் முதலிய),

(ஆ) வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் ஒலிபரப்புதல் ;

(இ) செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், சமூக ஊடகங்கள், எண்ணிமமுறையிலான (டிஜிட்டல்) விளம்பரப் பலகைகள் அல்லது வேறேதேனும் எண்ணிமமுறையிலான ஊடகத்தில் அல்லது வேறு வெளிப்படுத்துகைகளில் ;

(ஈ) வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எரிபொருள் வழங்குதல்;

முதலியவற்றுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதா, மேற்கொள்ளப்படவில்லையா என்பதை உறுதிப்படுத்துகின்ற சிட்டைகள், பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவுகள் இன்றி பெற்றுக்கொள்ளப்படுமாயின், அத்தகைய சேவையை வழங்கிய ஆளின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பன உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

இதன்போது,

(அ) சனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளரின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு அத்துடன்,

(ஆ) எழுதுகருவிகள், தொலைபேசிகள் அல்லது வேறு வகையிலான தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவு மேற்குறித்த விபரத்திரட்டில் உட்சேர்க்கப்படுதலாகாது.

04. அத்தகைய வருமான/செலவின விபரத்திரட்டுக்கள் 10 (பத்து) நாட்களினுள் கிடைத்ததன் பின்னர் அவ்வெளிப்படுத்துகைகள் கிடைத்திருப்பதையும், அவ்விபரத்திரட்டுக்களின் வெளிப்படுத்துதல்களை ஆளெவருக்கும் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய இடம் மற்றும் நேரங்களையும் குறிப்பிட்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரு தேசிய செய்தித்தாளிலேனும் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவித்தலொன்று வெளியிடப்படும்.

05. ஆளெவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவொன்றைச் செலுத்தி அவ்விபரத்திரட்டுக்களின் பிரதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். குறித்த கட்டண அளவை சொல்லப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து அறிந்து கொள்ள முடியும்.

06. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது வேறு அரசியல் கட்சியினால் அல்லது வேட்பாளரைப் பெயர் குறித்து நியமித்ததேருநரினால்அல்லதுவேட்பாளரொருவரினால்உரியதிகதிக்குஏற்புடையவிபரத்திரட்டுக்கள்ஒப்படைக்கப்படாதுள்ள விடத்து அல்லது குறித்த விபரத்திரட்டுக்கள் தவறுகளுடன்கூடியதாக இருக்கின்றவிடத்து சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றவராவதுடன், சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

07. (1) 2024 சனாதிபதித் தேர்தலின் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது வேட்பாளரைப் பெயர் குறித்து நியமித்த தேருநர் அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் ஒருவரினால்,

i. யாதேனும் அரசாங்கத் திணைக்களமொன்றினால், பகிரங்க கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது யாதேனும் அளவான பங்குவைத்திருக்கை அரசாங்கத்தினால் அல்லது யாதேனும் அளவான பங்குவைத்திருக்கை அரசாங்கத்தினால் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றினால் வகிக்கப்படுகின்ற 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைய எழுத்திலான சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியிடமிருந்து;

ii. வெளிநாட்டு அரசாங்கமொன்றினால், சர்வதேச ஒழுங்கமைப்பொன்றினால் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால்,

iii. நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிநாட்டுப் பங்குவைத்திருக்கை நூற்றுக்கு ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட உள்ளதான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனிகளுக்கு ஏற்புடைய முழுநேர யாதேனுமோர் எழுத்திலான சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட யாதேனுமொரு கம்பனியினால்; அல்லது

iv. ஆளடையாளத்தை வெளிக்காட்டாத ஆளெவரினாலும்;

அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது வேறு அரசியல் கட்சியின் அல்லது தேருநரொருவரினால் பெயர்குறிக்கப்பட்ட வேட்பாளரினால் தேர்தல் ஊக்கப்படுத்தல் அல்லது அதற்கு இடமளிக்கும் நோக்கத்திற்காக பண ரீதியான அல்லது பொரு ரீதியான வகையில், நேரடியாக அல்லது மறைமுகமாக அத்தகைய அன்பளிப்புகள் அல்லது உதவுதொகைகள் ஏற்றுக்கொள்ளப்படுதல் அல்லது பெற்றுக் கொள்ளப்படுதல் கூடாது.

2 (1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் அத்தேர்தல் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிந்தவராவதுடன், சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

EOG 08-0233

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.